செய்தி வெளியீடு எண். 39 நாள்: 19.01.2018

## அம்மா இரு சக்கர வாகனம் வாங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் மற்றும் சுய தொழில் செய்யும் மகளிர்களுக்கு அவர்கள் பணிபுரியும் இடங்களுக்கு எளிதில் செல்லவும் பல்வேறு பணிகளை விரைந்து செய்யவும் ஏதுவாக அவர்களுக்கு உதவும் வகையில் அம்மா இரு சக்கர வாகனம் வாங்க 50% மான்யம் வழங்கும் திட்டம் தமிழக அரசால் 2017-18-ம் ஆண்டு முதல் வருடத்திற்கு ஒரு இலட்சம் பெண்கள் பயனடையும் வகையில் அனைத்து ஊரகம் / பேரூராட்சிகள் / நகராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் : தமிழ்நாட்டில் வசிக்கும் 18 முதல் 40 வயதிற்குட்பட்ட வண்டி ஓட்ட தெரிந்த ஓட்டுநர் உரிமம் பெற்ற மகளிர்களுக்கு வழங்கப்படும். தனிநபர் வருட வருமானம் ஆண்டிற்கு ரூ.2.50 இலட்சம் மிகாமலும் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு மகளிருக்கு மட்டுமே வழங்கப்படும். வாகனத்தின் மொத்த மதிப்பில் 50% அல்லது ரூ. 25000/- இதில் எது குறைவோ அத்தொகையே மான்யமாக விடுவிக்கப்படும். பயனாளி அவருடைய சொந்த பணம் அல்லது அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது (பாரத ரிசர்வ் வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்ட) பிற நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறலாம். மேட்டார் வாகனம் சட்டம் 1988-ன் படி பதிவு செய்யப்பட்ட 125CC-க்குட்பட்ட திறன் வாகனம் புகை பரிசோதனை விதிமுறைகளுக்குட்பட்டு 01.01.2018 பிறகு வாகனம் வாங்கப்பட வேண்டும்.

அரசு உதவிப் பெறும் நிறுவனங்கள் / தனியார் நிறுவனங்கள் / அரசு திட்டங்கள் / சமுதாயம் சார்ந்த அமைப்பு நிறுவனங்கள் (ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு / கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மாவட்ட மக்கள் கற்றல் மையம் இவற்றில் தொகுப்பூதியம், தின கூலி மற்றும் ஒப்பந்த ஊதியம் பெறும் அனைத்து மகளிர் மற்றும் வங்கி தொடர்பாளர் / வங்கி ஒருங்கிணைப்பாளர் மற்றும் கிராம சுகாதார (ASHA) பணியாளர்கள் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

தொலை தூாரப்பகுதி / மலைப்பகுதி / மகளிரைக் குடும்ப தலைவராக கொண்ட பெண் / ஆதரவற்ற பெண்கள் / கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் / மாற்றுத் திறனாளி பெண்கள் / 35 வயதிற்குட்பட்ட முதிர் கன்னிகள் / ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு முன்னுரிமை தரப்படும். இட ஒதுக்கீடு ஆதி திராவிடர்களுக்கு - 21%, பழங்குடியினர்— 1%, மாற்றுத் திறனாளிகள் - 4% (அனைத்து பிரிவினர்கள்) அளிக்கப்படும்.

விண்ணப்பதாரர் விண்ணப்பம் பெற வரும்போது தங்களுடைய வயதுக்கான சான்று மற்றும் ஓட்டுநர் உரிமம் சான்று ஆகியவற்றை அளித்து விண்ணப்பங்களை சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகம் / பேரூராட்சிகள் / நகராட்சிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மகளிர் திட்ட அலுவலகத்தில் இலவசமாக 22.01.2018 முதல் 05.02.2018 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்படுகிறது. மேலும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 05.02.2018 மாலை 5 மணிக்குள் நேரிலோ, விரைவு அஞ்சலிலோ அல்லது பதிவஞ்சலிலோ அனுப்பலாம். அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மட்டுமே பதிவு எண்ணிடப்பட்டு ஒப்புகை இரசீது அளிக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**